# மாதர் போதினி

No. 255 ஏப்பிரல் 1919 No. 4

## THE CALL

## அழைப்பு

உன்னைச் சுற்றிலும் தினந்தினம் எத்தனையோ ஆத்துமாக்கள் மாண்டுபோகிறார்களென்று பார்! அவர்களை இரட்சிப்பது உன் மேல் விழுந்த கடனில்லையா? கிறிஸ்துவுக்காக தைரியமுள்ள போர்வீரியாய் சர்வாயுதபாணியாய் முன்சென்று சாத்தானின் கிரியையை அழித்தால் ஜெயம் உனக்குக் கிடைக்கும்.

நீ இரட்சிக்கப்படவும் மற்றவர்களை நீ இரட்சிக்கவும் தேவன் உனக்குக் கொடுத்திருக்கும் விலையேறப்பெற்ற சமயத்தைப்பற்றி நீ கவலையற்றிருப்பாயானால், பிறகு உனக்குக் காலங்கிடையாது. நீ செய்யக்கூடிய தெதுவோ அதை இப்பொழுதே செய். தங்களுடைய கனத்தையும் மகிமையையும், சுகத்தையும் செல்வத்தையும் ஜீவனையும் ஆண்டவருக்காக ஆத்துமாக்களைக் கொண்டுவருவதில் தத்தஞ்செய்த இரத்தச்சாட்சிகளைக் காணும் நாள் சீக்கிரம் வருகிறது. அவர்கள் எவ்வளவோ செய்திருக்கிறார்கள்? நீ செய்ததென்ன? அந்த மகாநாளில் வெட்கப்பட்டுப் போகாதிருக்கப் பார்!

சாது சுந்தர்சிங்.

## OBJECTS OF INTERCESSION

## பரிந்துபேசும் பொருள்கள்

**ஞாயிறு.** இந்தியாவில் செய்யப்படும் சுவிசேஷமுயற்சி வேலை இந்நாட்டிலும் மற்றநாடுகளிலும் தேவனுடைய இராஜ்யம் முன்னேறக் கருவியாயிருக்கும்படி.

இந்திய சபைகள் உயிர்ப்பிக்கப்பட்டு, சபையின் ஒவ்வொரு அங்கத்தவரும் கிறிஸ்துவுக்காக முழுஇருதயத்தோடு உழைக்கும்படி.

VOL. XXXIV.

திங்கள். சுவிசேஷமுயற்சி சம்பந்தமான கமிட்டிமாரும் தலைவரும் துணிந்த விசுவாசத்தோடும் எதிர்நோக்குதலோடும் தேவசித்தத்திற்கேற்க சகல காரியங்களையுஞ் செய்யும்படி (உன் சொந்த சபையைச் சேர்ந்தவர்களை விசேஷமாய் நினை).

இதில் அவர்கள் ஆவியானவருடைய நடத்துதலை மென்மேலும் தேடவும், இடையில் நேரும் தவறுதல்களினின்றும் அபாயங்களினின்றும் காக்கப்படவும்.

சேவ்வாய். குருமாரும் சபையார் யாவரும் சபையினால் செய்யப்படக்கூடிய காரியங்களை அறிந்துகொள்ளவும், கிறிஸ்துவண்டை ஆத்துமாக்களைக் கொண்டுவரும் வேலைக்காகத் தங்களைப் பிரதிஷ்டைபண்ணவும் (உன் சொந்த சபையையும் உனக்கு அறிமுகமானவர்களையும் நினை).

இந்தியாவிலுள்ள ஜனங்கள் தங்கள் பாவநிலைமையை உணர்ந்து ஒரு இரட்சகர் தேவையென்று அறிய.

புதன். சபையிலுள்ள ஸ்திரீகள் மற்ற சகோதரிகளைக் கிறிஸ்துவண்டை கொண்வெரும்படியாகவும் அவர்கள் ஆத்துமாவுக்காகவும் சரீரத்துக்காகவும் உழைக்கும்படியாகவும் தங்களை ஒப்புக்கொடுக்க.

இவ்வேலையை நடத்துகிறவர்களுக்கு விசேஷித்த வல்லமையும் ஆவியின் எழுப்புதலுங் கிடைக்கும்படி (உன் ஊரிலுள்ள ஸ்திரீகள் ஊழியத்தை விசேஷமாய் நினை).

வியாழன். கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்குள் விசேஷ படைமுயற்சிசெய்யும் சபைகள் உன்னதத்திலிருந்து வரும் பெலனாலும் ஞானத்தாலும் தரிப்பிக்கப்பட்டு, ஆண்களையும் பெண்களையும் விசேஷமாய்க் குடும்பங்களையும் கிறிஸ்துவண்டை கொண்டுவரக்கூடியவைகளாயிருக்கவும், வேலைஸ்தானங்கள் சுவிசேஷவாசனையினால் நிறைந்திருக்கவும்.

கிறிஸ்தவர்களல்லாதவர்களுக்குள்ளே ஊழியஞ் செய்யும்படி பிரித்தெடுக்கப்பட்ட சுவிசேஷகர் அநேகர் கிறிஸ்துவண்டை இழுக்கப்படத்தக்க விதமாய் ஏற்றபடி சுவிசேஷத்தை அறிவிக்கும் கிருபையைப்பெற.

வெள்ளி. 1919-ம் வருஷம் டாக்டர் எடி அவர்கள் இந்தியாவைச் சந்திப்பது சபைகளுக்கும் அவைகளின் மூலமாய் இந்தியாவுக்கும் பேராசீர்வாதங்கொண்டுவரும் ஏதுவாயிருக்க.

இவ்வித ஏற்பாடு செய்வோரும், இதற்காக விசேஷ ஆயத்தஞ் செய்யுஞ் சபைகளும் சகல காரியங்களிலும் செவ்வையாய் நடத்தப்படும்படி.

சனி. இந்த முயற்சியினால் சபைகளுக்குள் ஐக்கியமும் ஏகோபித்த முயற்சியும் அதிகரித்து, இவ்வேலையில் சம்பந்தப்பட்ட பற்பல ஊழியருக்குள் ஐக்கியஆவி வளர்ந்து பெருக.

இம்முயற்சியினால் இந்தியாவிலுள்ள சபைகள் ஸ்திரப்பட்டு ஆவியின் அனல் அடைந்து இந்தியாவைக் கிறிஸ்துவண்டை நடத்த உதவும் கருவிகளாய் உபயோகப்படவும், நற்கிரியைகளில் பெருகி கிறிஸ்துவின் சிந்தையை முற்றும் வெளியிடக்கூடியவைகளாயிருக்கவும்.

'சகோதரரே. இஸ்ரவேலர் இரட்சிக்கப்படவேண்டுமென்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் விண்ணப்பமுமாயிருக்கிறது.' ரோம. 10: 1.

இந்தியா இரட்சிக்கப்பட வேண்டுமென்பதே என் முழு வாஞ்சையும் ஜெபமுமா?

## PROVISIONAL PROGRAMME OF DR. EDDY AND PARTY, 1919

## டாக்டர் எடி என்பவர்களும் அவரைச் சேர்ந்தோரும் 1919-ம் வருஷத்தில் ஊழியஞ்செய்யக். கருதும் இடங்கள்

| | | |
|---|---|---|
| ஏப்பிரல்மீ | 4—6 | ஜப்பல்பூர் |
| | 8—10 | கல்கத்தா |
| | 11—14 | எல்லூர் |
| | 15—17 | குத்தி |
| | 19—20 | டோர்னக்கல் |
| | 21—24 | பெஸ்வாடா |
| | 27—30 | தமிழ் வட்டகைப் பாதிரிமார் கான்வரன்ஸ் கூட்டம் |
| மேமீ | 5—7 | உத்தகமண்டலம் |
| | 8—9 | கோத்தகிரி |
| | 12—15 | கொடைக்கானல் |
| | 22—25 | சிம்லா |
| | 28—30 | மசூரி |

ஜூன்மீ 4—6 கள்ளிக்கோட்டை
8—10 தலைச்சேரி
மங்களூர்
11—13 கன்னுங்குளம்
15—20 திருவெலா—பாதிரிமார் கான்வரன்ஸ் கூட்டம்
22—25 கோட்டயம்
26—29 மாவிலிக்கரா

ஜூலைமீ 1— 4 திருவேந்தரம்
5— 7 நாகர்கோயில்
8—10 திருநெல்வேலி (தனித்தாள் ஊழியர்—குத்தாலம்)
12—15 மதுரை
17—20 அறுப்புக்கோட்டை
22—25 வேலூர்
27—29 கிண்டி

ஆகஸ்டுமீ—பர்மா

## EXALTATION BEFORE ENEMIES

## சத்துருக்களுக்கு முன் உயர்வு

### சங்கீதம் 23: 5

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

சங்கீத வசனங்களில் இதோர் இன்பமான சிறந்த வசனம். இதின் கருத்தெல்லாம் தாவீதுராஜாவின் ஜீவியத்தில் அநுபோகமாகக் கண்ட விஷயங்கள்தான். இந்தத் தாவீது ராஜனைப்போல் தாழ்ந்த ஜீவியத்திலிருந்து உயர்ந்தவனுமில்லை, நன்மைசெய்து துன்பம் அனுபவித்தவனுமில்லை, துன்பமடைந்து உயர்ந்தவனுமில்லை, தரைமட்டும் தாழ்த்தி மேன்மையடைந்தவனுமில்லை யென்பது எல்லாரும் அறிந்த சத்தியம். இச்சங்கீதத்தின் பகுதியிலிருந்து ஐந்து கருத்துகளை யறிந்துகொள்ளலாம்.

முதலாவது சத்துருக்கள். தாவீது ராஜாவின் இளமைப் பிராயத்தில் யாதொரு சத்துருக்களும் அவனுக்குக் கிடையாது. சிறுவயதில் சிரிப்பும் சந்தோஷமும் களிப்பும் விளையாடுதலுமாய்க் காலங் கழித்தான். எப்படியெனில் ஆடு மேய்த்துக்கொண்டிருக்கும்போது ஆட்டுக்குட்டிகள் குதித்தால் சிரித்து ஆனந்தங்கொள்வான், தன்னிடம் அவைகள் ஓடிவருமாயின் தன் தடியால் தடவிக்கொடுத்துத் தேற்றுவான்; எல்லா ஆடுகளையும் பசுமையான புல்லுள்ள கணவாய்ப் பக்கம் ஒழுங்காய் ஓட்டி புல் மேயும்படி செய்து சந்தோஷிப்பான்; சாயங்கால வேளையில் இருட்டான மலைச்சார்பிலுள்ள பள்ளத்தாக்குகளினூடே நடத்தும்போது தன் கோலால் அங்கங்கே செடிகளிலேயும், மரங்களிலேயும், பாறைகளிலேயும் அடித்து ஆடுகளைத் தைரியப்படுத்தி நடத்துவான்; தெளிந்த ஆற்றுஜலத்தில் தண்ணீர்காட்டி அகமகிழ்வான்; வீடுகொண்டு சேர்த்து ஒவ்வொன்றாய்ப் பேர்சொல்லி அழைத்துச் சந்தோஷமனுபவிப்பான். என்ன இன்பமான ஜீவியம்! ஆனால் இந்தச் சந்தோஷங்களெல்லாம் வெகுகாலமிருக்கவில்லை. பெலிஸ்தரெல்லாம் கூடி இஸ்ரவேல் ஜனங்களுக்கும், சவுல் ராஜனுக்கும் விரோதமாய் மும்முரமாய் மூர்க்கங்கொண்டு கோலியாத்தென்ற இராட்சதனை முன்னிருத்தி இஸ்ரவேலரையும், வானத்துக்கும் பூமிக்கும் தேவனாகிய யேகோவாவையும் தூஷித்துச் சமர்த்துப்பேசினார்கள். எல்லா இஸ்ரவேலரும் கிடுகலக்கமுற்றார்கள். இராஜாவும், தளகர்த்தன் அப்னேர்தானும் நடுநடுங்கிப் பயந்து யார் இந்தக் கொடிய கோலியாத்தின் கைக்குத் தப்புவிப்பார்களென்று தியங்கித் திகைத்து நிற்கும்தறுவாயில் தாவீதென்ற இளைஞன் தற்செயலாய் இக்காட்சியைக் கண்ணுற்று சஞ்சலமடைந்து நான் அந்த நெடிய கொடியனை நிர்த்தூளியாக்குவேனென்று ராஜசமுகம் செய்தி சொல்லியனுப்பினான். இராஜன், தாவீதென்ற இளைஞன் கோலியாத்தின் சங்கதி தெரியாமல் சொல்லுகிறானென்று எண்ணி, 'நீ சற்று நிதானித்துச் சொல். ஏனெனில் அவன் மகா பராக்கிரமன், நீ எம்மாத்திரம்! என்றான். அதற்குத் தாவீது 'நான் சேனைகளின் தேவனின் நாமத்தைக்கொண்டு ஜெயங் கொள்வேன். அவர் என்னைத் தம் வல்ல செயலால் நடத்தின அநுபவமுண்டு. முன்னே ஓர் கரடியும், ஓர் சிங்கமும் என் கையால் மாண்டன' வெனச்சொல்லி மகா வைராக்கியம் பூண்டவனாய் நின்றான். அப்பொழுது இராஜாவும் இஸ்ரவேலரும் சம்மதித்து நெடிய கொடிய இராக்ஷதனோடு சமர்புரிய அனுப்பினார்கள். தாவீது தேவனுக்குள் திடமனதோடு அரக்கனை எதிர்த்து ஒரு கல்லாலே தரையிலே வீழ்த்தினான். இராஜாவுக்குச் சந்தோஷம், சமஸ்த இஸ்ரா

வேலருக்கும் இரட்சிப்பு, தேவனுக்கு மகிமையுண்டாயிற்று. இஸ்ரவேலர் அவன் தீரவீரத்தை மெச்சிப்பேசினார்கள். இராஜா புகழ்ந்து தன் குமாரத்தியை மணம்புரியும்படி செய்வித்தான். கன்னிமாதர்கள் அவன்பேரில் கவி பாடலானார்கள். அன்றுதான் தாவீதுக்குத் துன்பம் ஆரம்பமாயிற்று. இவையெல்லாம் மாறுவேடம் பூண்டு அவனை வருத்துங்காரியங்களாயின. ஆனால் தாவீது தேவன் தன்னை நடத்தி ஆட்கொண்டிருக்கும் மேன்மையை மறக்கவில்லை. அன்னா, காய்பா, பரிசேயர்கள், வேதபாரகர்கள் பொறாமைகொண்டு கிறிஸ்து வள்ளலைக் கொலைசெய்யுங்கால் சதிநினைத்ததுபோல் தாவீதை மானைப் போல வேட்டையாடிக் கொல்லும்படி சவுலும் அவன் தளகர்த்தனும், ஜனங்களும் எத்தனம்பண்ணி மலைக்குன்றுகளிலேயும், காடுகளிலேயும் தேடித் திரிந்தலைந்தார்கள். சத்துருக்களால் வந்த துன்பங்களினிமித்தம் ஓடி ஒளித்து குகைகளிலே ஒதுக்கிடம் தேடினான். ஜீவன் கசப்பாகும்படி அவ்வளவு கஷ்டங்கள் லபித்தன. மரணத்துக்கும் எனக்கும் ஓர் மயிர்க்கடையளவுமட்டு மிருக்கிறதென்று தவித்தான், அங்கலாய்த்தான். தாவீதைப்போல் துன்பமடைந்தவன் யார்? இக்காலங்களிலே அவன் தனக்கிருந்த விசுவாசத்தைத் தவறவிடவில்லை. பலத்த விசுவாச அஸ்திபாரம்போட்டு மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுமாப்போல் கர்த்தரைநோக்கிக் கவிசாற்றி அபயமிட்டான்; கர்த்தரைப் போற்றினான்; அவரது வலுசெயல்களைப் புகழ்ந்தான்; தன்னை இகழ்ந்தான், தாழ்த்தினான்; தலைகவிழ்ந்து வணங்கினான், மன்றாடினான், மனுப்பண்ணினான். துன்பங்கள் அவனை நேர்வழியாய் கடவுளண்டை கொண்டுபோகும் ஒடுக்கமும் நெருக்கமுமான பாதைகளாயிருந்தன. துன்பத்தைப்போல் ஒரு மனுஷனை விசுவாசமாகிய தூரதிருஷ்டிக் கண்ணாடி மூலமாய் தேவனைக் கண்ணோக்கச்செய்யுங் கருவி கிடையா. இம்மண்டலத்திலுதித்த மானிடர்கள் யாவருக்கும் மூன்று சத்துராதிகள் ஏற்பட்டிருக்கின்றன. பிசாசு, மாம்சம், உலகமென்ற முச்சத்துருக்களை எதிர்த்துப் போராடி ஜெயிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். பிசாசு மாம்ச கண்களுக்குத் தோன்றாச் சத்துரு, அவன் கெர்ச்சிக்கிற சிங்கம். மாம்சம் ஒவ்வொருவனுக்கும் உட்சத்துரு, மகா பெலவீன பாண்டம், எங்கே சாய்ந்தாலும் சாயும். உலகம் மாயாதோற்றமுள்ளது. சிற்றின்பக்கடல், மகா பயங்கரமான பள்ளத்தாக்கு உண்மையான கிறிஸ்தவர்களெல்லாரும் அநேக துன்பங்களின் வழியாய் பரலோக ராஜ்யம் சேரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். விசுவாசத்தைக் கைப்பற்றவேண்டும், கிருபையைச் சார்ந்துகொள்ளவேண்டும், தாழ்மையைத் தரிக்கவேண்டும். அப்பொழுது எல்லாத்

துயர்களும் புகை பறக்கடிக்கப்படுவதுபோலும், மெழுகு அக்கி னிக்குமுன் உருகி வடிவதுபோலும், சூரியனைக் கண்ட பனிபோ லும் மறைந்துபோம்.

இரண்டாவது தெய்வ நடத்துதல். எத்தனை சத்துருக்களெழும் பினும், எவ்வளவு சதியோசனைகளுதித்தாலும், எம்மட்டும் துன் பங்கள் தொடர்ந்தாலும் கர்த்தரைப் பிடித்தபிடியை விடப்படாது. தாவீது என்ன சொல்லக்கூடியவனாய் இருந்தானென்றால், "பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்துபோனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம். ஏனெனில் சேனை களின் கர்த்தர் நம்மோடிருக்கிறார், யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்." துன்பங்கள் மதில்கள்போல் உன்னத மாய் எழும்பும்போதுதான் தேவனுடைய நடத்துதலும் பாதுகாப்பும் தெளிவாய் விளங்கும். சர்வ வல்லமையுள்ள கருணைக்கடவுள் தம் பிள்ளைகளை செவ்வையான பாதையிலே நடத்த அறிவார். வேதத் தின் அநேக திருஷ்டாந்தங்கள் நம்மைத் திடப்படுத்தக்கூடியவை களாய் இருக்கின்றன. சாந்தகுணமுள்ள யாக்கோபை மூர்க்கமுள்ள சகோதரனாகிய ஏசாவின் கைக்குத் தப்புவிக்கவும், நேர்மையுள்ள யோ சேப்பைக் குழியில் அழிந்துபோகாமல் தூக்கியெடுத்து எகிப்திலே சிங்காசனத்துக்கு உயர்த்தவும், பக்தனாகிய தாவீதை பொல்லாத ஆவி பிடித்த சவுலின் கைக்குத் தற்காத்து ராஜனாக்கவும், தம்முடைய தீர்க்க தரிசிகளைக் குகைக்கு ஐம்பது ஐம்பது பேராக வைத்து ஆதரித்து இரத்தப்பிரியமுள்ள யேசபேலின் கைக்குத் தப்புவிக்கவும், சிற்றின்ப வெறுப்புள்ள அனனியா, அசரியா, மிசாவேல் என்ற வாலிபர்களை அக்கினியின் கொடூரத்துக்குப் பாதுகாக்கவும், பலத்த விசுவாசியா கிய தானியேல் தீர்க்கனைச் சிங்கங்களின் வாயையடைத்து இரட் சிக்கவும், மொ[illegible] என்ற சிறந்த ஜனாபிமானியை ஆமானின் தூக்குமரத்துக்[illegible]கி இரட்சித்து சிம்மாசனம் ஏற்றவும், சபைக்குத் தூண்[illegible]ற பேதுருவை ஏரோதின் கைக்கும் யூதஜனங் களின் துர் ஆ[illegible]சனைகட்கும் பாதுகாக்கவும், கிருபா சமுத்திர மாகிய காருணி[illegible] கடவுள் அறிந்திருந்தார். இயேசுகிறிஸ்து நேற் றும் இன்றும் எ[illegible]றும் மாறாதவராய்த் தம் பிள்ளைகளைக் காப்பாற்ற ஆயத்தமுள்ளவ[illegible]ாயிருக்கிறார். சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்.

மூன்றாவது பந்தி. இப்படியெல்லாம் அலசடிப்பட்ட தேவ னுடைய பிள்ளையைக் காப்பாற்றினபின் ஓர் விருந்தும் அவசியம் வேண்டியதே. 'ஓ! தாகமாயிருக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்

கள், வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள்' என்று கூப்பிடும் இன்பசத்தம் எவ்வளவு திடப்படுத்தக்கூடியதாய் இருக்கும்! என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர் என்று சொல்லி அவரது அழைப்புக்கு இணங்கவேண்டும். பட்சிக்கும் அக்கினிபோன்ற இராஜாதி ராஜா கர்த்தாதி கர்த்தா நம்மைப் பற்றிப்பிடிக்கும் சத்துருக்களை நொறுக்கினர், பாவத்தையும் அதின் சாபத்தையும், சாத்தானையும் அவன் மரண பாதாளத்தின் கொடூரத்தையும் மாம்சத்தையும் அதின் துர்க்கிரியைகளையும் ஜெயிக்க வான்விட்டிறங்கின யூதாவின் சிங்கமாகிய கிறிஸ்து வள்ளல் 'இதோ, ஜீவ அப்பம் நானே' என்கிறார். விருந்து நேரம், இன்ப நேரம், இளைப்பாறும் நேரம் ஒருவரையொருவர் அறிந்து கொள்ளும் தருணம். முன் சம்பவங்களையெல்லாம் இரட்சகனும் இரட்சிக்கப்பட்டவனும் தம் தம் அநுபோக சம்பந்தமாய் இரட்சித்த விதத்தையும், பட்ட பாடுகளையும் எடுத்துரைத்துக் களிகூர்ந்து மகிழும் வேளையது. சத்துருக்களுக்கு முன்பாக உயர்த்தப்படுவதற்கு முன் ஏறும் முதல்படி விருந்துதான். எங்கள் வாணுளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி காலையிலே உமது கிருபையால் திருப்தியாக்கும் என்கும்போது ஆபத்தில் நானே அவனோடிருந்து அவனைத் தப்புவித்து அவனைக் கனப்படுத்துவேன் என்கிறார். தவித்தும் களைத்தும் போனவனை அழைக்கிறார், அழைக்கிறார்.

நாலாவது அபிஷேகம். இந்த உலகத்தின் நாஞவிதக் கறைகள் நீங்கி தேவனோடு ஒப்புரவான தொண்டனுக்கு அபிஷேகதிடம் வேண்டுவது இன்றியமையாத விஷயம். நீர் உம்முடைய கற்பனைகளைக்கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞானமுள்ளவனாக்குகிறீர் என்ற சங்கீத வசனமும் நிறைவேறவேண்டும். அபிஷேகம் இராஜாக்களுக்கும் தேவஊழியம் செய்கிறவர்களுக்கும் இல்லாமல் தீராது. என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல் உயர்த்துவீர், புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணுவீர் என்றபடி உயர்வு கர்த்தரால் வரவேண்டும். ஆரோன் தேவனுடைய ஊழியத்துக்கு அழைக்கப்பட்டபோது தைலம் தாடிவழியாய் வழிந்தோடினதுபோலப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று உயர்வடையவேண்டும். அபிஷேகத்தினுல் கர்த்தர் தமது கற்பனைகளையெல்லாம் விவரித்துக்காட்டிப் போதிக்கிறார். ஒரு ஊழியன் பிரதிக்கினைபண்ணி சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். அப்பொழுது தாவீதுக்குச் சொன்னபடி பூமியிலிருக்கிற பெரியோர்களின்

நாமத்திற்கொத்த பெரியநாமத்தை உண்டாக்குவார். நான் அவனுக்குப் பிதாவாயிருப்பேன், அவன் எனக்குக் குமாரனாயிருப்பானென்று வாக்குத்தத்தம் செய்வார். உன் வீடும் இராஜ்யமும் என்றென்றைக்கும் ஸ்திரப்பட்டிருக்குமென்பார். சத்துராதியாகிய சவுலும் தாவீதை நோக்கி: 'என் குமாரனாகிய தாவீதே நீ ஆசீர்வதிக்கப்பட்டவன், நீ பெரிய காரியங்களைச் செய்வாய், மென்மேலும் பலப்படுவாய்' என்றதுபோல் சத்துருக்கள் இச்சகம் பேசி அடங்கும்படி செய்வார். அங்ஙனமாகிய அமாசா ஆவியினால் நிறைந்தவனாய் 'தாவீதே, நாங்கள் உம்முடையவர்கள்; ஈசாயின் குமாரனே, நாங்கள் உமது பட்சமாயிருப்போம்; உமக்கு சமாதானம், சமாதானம், உம்முடைய தேவன் உமக்குத் துணைநிற்கிறார்' என்று வாழ்த்தினதுபோல் வாழ்த்தச் செய்வார்.

ஐந்தாவது **ஊழியம்.** என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. இருதயம் தேவனைப்பற்றிய மகிழ்ச்சியால் பொங்கிவழியும். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவதண்ணீருள்ள நதிகள் ஓடும் என்று பரி. யோவான் 7-ம் அதிகாரம் 38-ம் வசனத்தில் நமது அருமை இரட்சகர் பகர்ந்தாரே அது அருமையான விஷயம். தாவீது அபிஷேகம் பெற்றபின் கர்த்தரின் பெட்டிக்கு முன் துள்ளினான். ஆண்டவருக்கு ஆலயம் கட்டுமுன் என் படுக்கையாகிய கட்டிலின்மேல் ஏறமாட்டேனென்று தீர்மானம் செய்தான். உமது ஆலயப்பிராகாரங்களில் காத்திருப்பதையே நாடுவேனென்றான். அந்தி, சந்தி, மத்தியானவேளைகளில் தியானம் பண்ணி முறையிடுவேனென்றான். ஒரு நாளில் எழுதரம் உம்மை நோக்கிக் கூப்பிடுவேனென்று ஒழுங்குசெய்துகொண்டான். பாதகருக்கு உமது வழியைத் தெரியப்படுத்துவேனென்றான். இப்படியாக அவன் ஜீவகாலமெல்லாம் தேவனுடைய வேலையிலும் அவருடைய புண்ணிய கிரியைகளைத் தியானிப்பதிலுமே அதிகமான நேரத்தைச் செலவிட்டான். உத்தம விசுவாசியின் ஜீவியத்தில் இவ்வைந்து குறிப்புகளும் அடங்கியிருக்கும். இரட்சிக்கப்பட்டவன், பெலப்படுத்தப்பட்டவன், ஐக்கியப்பட்ட அபிஷேகம் பெற்றவன், சாட்சி பகருகிறவன். நம் ஜீவியம் இப்படியிருக்குமாயின் நம்மைச் சுற்றிலுமிருக்கும் இலட்சக்கணக்கான மனுஷர்கள் பாவம் மாம்சம் பிசாசென்ற சத்துருக்கள் கையில் அகப்பட்டு பங்கப்படும்போது சும்மாயிருப்போமா? நிச்சயமாகவே கஷ்டங்களைச் சகித்து இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கூறுவோமே. இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகளல்லவே.

'கவலைக[illegible]ர், கண்ணீர் துடைப்பார்,
கடைசிமட்டு[illegible] திருப்பார்;
பவமன்னிப்[illegible]யம் கொடுப்பார்,
பரமபதவழியினுள் எந்தனை[illegible]ர்,—என் மீட்பர்.'

V.D. Kailasam.

## EXPERIENCE IN SICK BED

## வியா[illegible]க்கையின் அநுபோகம்

[illegible] 4

'நான் மரண இருளின் பள்ளத்தாக்[illegible] பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட [illegible] உமது கோலும், உமது தடியும் என்னைத் தேற்றும்' என்பதும், கீதம் 102: 16-ல் 'திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம் பண்ணாமல் அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிக்கிறார்' என்பதும், சங்கீதம் 81: 7-ல் 'நெருக்கத்திலே நீ கூப்பிட்டாய் நான் உன்னைத் தப்புவித்தேன்' என்பதும் தேவனுடைய பிள்ளைகளுடைய ஜீவியத்தில் நிச்சயமான காரியங்களாயிருக்கின்றன. பின் வருகிற சம்பவம் உண்மையாய் நடந்த காரியமாதலின் எல்லாருக்கும் பிரயோசனமாயிருக்குமென்று உத்தேசித் தெழுதலாயினேன்.

சில வருடங்களுக்கு முன் ஒரு மனிதன் திடீரென நினைத்திராத வண்ணம் வியாதியினால் பிடிக்கப்பட்டு நாளடைவில் சுரம் கடினமாகிவிட்டது. வியாதியஸ்தனும் தனக்கு வந்திருக்கும் சுகயீனம் சாதாரணமானதன்று என்று சொல்லும்படியாயிற்று. ஏனெனில் எத்தனையோ வியாதிகள் அவன் சரீரத்தில் தோன்றி மருந்தின்றி ஜெபத்தினால் சுகமானதுண்டு. இப்போது அம்மனிதனுக்கு விடாத் தலைநோயும், அமையாச் சுரமும் சில நாட்களுக்கிருந்தபின் அகோரக்காய்ச்சலும், தலை யெடுக்காவிகா[illegible]முண்டாகிவிட்[illegible] [illegible] மருந்தொன்றும் சாப்பிடாமல் சாதாரண அன்னம் புசித்து, கர்த்தரை நோக்கி ஜெபித்துக் காலங்கழித்தான். ஆனாலோ வியாதி தன் மும்முரத்தைக் காட்ட ஆரம்பித்தது. மகா வேகங்கொண்டு அவனைப் படுக்கையில் கிடத்தி மறுபடி தேவனைப்பற்றி நினைக்கச் சக்தியற்றவனாக்கிற்று. உள்ளம் தடுமாறி பதை பதைத்தான். வீட்டிலுள்ளவர்கள் வைத்தியருக்கு ஆளனுப்பி அவர் வந்து சில பிரயோகங்களைச் செய்திடினும் இன்னமும் யாதொரு மாறு

தலுமுண்டாக வில்லையென்று கண்டு இன்னொர் டாக்டருக்கு ஆளனுப்பினதில் அவரும் வந்தென்ன வியாதி யென்று கண்டு பிடிக்க முடியாமல் மருந்தனுப்பினர். இப்படி சில நாட்கள் மருந்து சாப்பிட்டபோதிலும் யாதாமொரு குணமு முண்டாகவில்லையே யென்றதிசயித்து சரீர இரத்தமெடுக்க வேறோர் சுக்க பண்டிகளுக்குப் பரீட்சைக்கு அனுப்பலாயினர். இப்போது தான் டைவாயிட் (Typhoid) என்ற கடுஞ்சுரமென்று கண்டு பிடித்தனர். இதற்குள்ளாக அவ்வியாதியஸ்தனுக்கு சுரம் அதிகக் கடினமாகி சிலவேளை புலப்பமும், சிலவேளை அமைதலும் இன்னொர்வேளை வேத வசன முச்சரிப்பதுமாய்க் காலங்களைச் செலவழித்தான். வீட்டில் மனைவி மக்களுக்கும், இனத்தாருக்கும், இக்கட்டுகளும் சஞ்சலங்களும் ஆரம்பித்தன. இப்படியிருக்குங்கால் ஒருநாளிரவில் இவ்வியாதியஸ்தன் ஒரு தரிசனங்கண்டெழுந்து தன்னவர்களுக்குப் பின் வருமாறு எடுத்துரைத்தான் :

மகா உன்னத கடவுள் வானத்தையும் பூமியையும் அளாவி நின்றார். வியாதியஸ்தன் அவர் கரத்தில் பிடிக்கப்பட்ட ஒரு சிறு பையன்போல் காணப்பட்டான். அவரது திருமுகத்தையும், பொற்பாதங்களையும் காணக்கூடாதபடி அவ்வளவு சிறு பாலியனாக நின்றான். இந்தச் சிறு பையன்போன்ற வியாதிக்காரன் தேவாதி தேவனிடம் நியாயம்பேச ஆரம்பித்தான். எப்படியெனில், ஆண்டவரே நீர் ஒருநாள் என்னை அற்புதமாய்ச் சந்தித்து ஆட்கொண்டதுண்டே, அந்நாள் முதற்கொண்டு உம்மையே நம்பி, உமக்காகப் பக்தி வைராக்கியங்கொண்டு நின்னற்புதச் செயல்களைப்பற்றி சாட்சி பகர்ந்ததுமுண்டே, இப்படி யிருக்கத்தக்கதாக இவ்வியாதி வந்ததற்குக் காரணமேன். நான் நம்பின வண்ணம் யார் உம்மை நம்புவார், எனக்கிருந்த வைராக்கியத்தைப்போல் யார் காண்பிக்கக்கூடும். அநேக லக்ஷக்கணக்கான மனுப்புத்திரர் நம்பினதுண்டு, அநேகமாயிரக் கணக்கான உம்முடைய தாசர்கள் ஊழியஞ்செய்த துண்டு. அநேகர் ஆராதித்ததுண்டு. ஆனால் நானோ உம்மைப்பற்றிய விசுவாசத்தை நிலை நாட்ட உத்தேசித்தேன். நீர் உம்முடைய சீஷர்களுக்கு மத். 10 : 1-ம், லூக்கா 9 : 1-ம் கற்பித்தழுத்திய வண்ணம் உம்முடைய பிள்ளைகளுக்கு வேண்டிய ஆத்தும சுகமும், சரீர சௌக்கியமும் கொடுத்து மெய்யான ஜீவ நிலையை ஸ்தாபித்து, நீர் இருக்கிறவராகவே யிருக்கிறீர். நீர் நேற்றும் இன்றும், என்றும் மாறாதவரா யிருக்கிறீரென்பதை மானிடர்களறிந்துகொள்ள வேண்டுமென்பதாய் பிரயாசப்படுகிறவனென்பதை நீர் மறந்துபோகக்கூடாதென்றான். இன்னமும் அவன் அவரை நோக்கி : இப்படி நம்பின

என்னை நீர் வியாதியில் போட்டு அழுத்துவது உமக்கு நியாயமோ வென்றும், யாரும்மை இப்படி நம்பப்போகிறதென்றும் அபயமிட்டான். அத்தருணத்தில் ஒரு மனுஷன் அஞ்சல்காரன்போல் கர்த்தருடைய சிட்சையை அற்பமாயெண்ணாதே; அவரால் கடிந்து [illegible] சோர்ந்துபோகாதே யென்று சொல்லிக் கடந்துபோனான். அப்போதுதான் இது காத்தருடைய சிட்சை, இதை அற்பமாய் எண்ணக்கூடாது, எண்ணினால் அதோகதியாய்ப் போவேனென்று எண்ணினான். இப்படி அம்மனிதன் கடந்து சென்ற சற்றுநோத்திற்குப் பிறகு இன்னொர் மனுஷன் இவர்கள் இரண்டுபேருக்கு முன்பாகச் சிவப்புத்துணியடித்து அதில் சிறிதும் பெரிதுமான அநேக கீறல்கள் போடப்பட்டுள்ள கரும்பலகையைக் கையில் பிடித்தவனாய் வந்து சில நிமிஷங்கள் நின்றான். இதைக் கண்ணுற்ற அச்சிறியனானவன் அதில் கீறப்பட்டிருப்பவையெல்லாம் என் பாவங்கள், என் பாவங்கள், ஐயோ என்றழுதான். அதில் எழுதப்பட்டிருந்ததெல்லாம் இந்துஸ்தானி எழுத்துக்கள்போல் வாசிக்கக்கூடாதவைகளாயிருந்தன. உடனே தேவன் இப்படி அழுதலறத் தொடங்கின அவனைப்பார்த்து, அப்படியா? நல்ல காரியம். உன் பாவங்கள்தானென்று ஒத்துக்கொள்ளுகிறாயா என்றார். அதற்கு அந்த வியாதியஸ்தன்: ஆம் ஆண்டவரே, ஆம் ஆண்டவரே என்று நடுங்கிப் பதைத்து மறுமொழி கூறினான். தேவன் அவனைப்பார்த்து மெத்தச் சந்தோஷம், பயப்படாதே, இப்போதோ நானுன்னை அன்பாகப் பிடித்திருக்கிறேன். ஆகையால் என் அன்பின் காத்திலிருப்பதை மறந்துவிடாதே; ஏனென்றால், சில வேளைகளில் கடுங்காற்றெழும்பி உன்னதமாய் வளர்ந்து நிற்கும் மரங்களின் கிளைகளை முறித்து அவைகள் கீழே விழும்படி செய்யும்; மின்னல்கள் பளீர் பளீரென மின்னிப் பிரகாசித்துக் கண்களில் சொலிக்கும்; பயங்கரமான இடிச்சப்தங்கள் தொனித்து அதிரச்செய்யும்; வானங்கள் கிழிந்து சோனாமாரியாய் மழை பொழியும்; என்ன சம்பவங்கள் நடந்தாலும் நான் அன்பாகப் பிடித்திருக்கிறேனென்பதைமட்டும் மறந்துவிடாதே என்றார். இவையெல்லாம் சொல்லும்போது உயரமான பர்வதத்தின் சோலை மத்தியில் நிற்பதாகக் காணப்பட்டது. அப்போது ஒரு மனுஷன், சினம் கடந்து போகுமட்டும் இந்த மலையின் பிளப்பிலே யிருயென்று சொல்லிக் கடந்து சென்றான். உடனே விழித்து இவ்வாச்சரியமான காக்ஷியை வீட்டிலுள்ளவர்களுக்கும் டாக்டர் வந்தபோது அவரிடமும் சொல்லலுற்றான். அவர்களுக்கு வியப்பாயிருந்தது. வியாதியின் கொடூரம் தணியவில்லை. வியாதியஸ்தன் பிழைப்பேனென்று கர்த்தரை முன்னிட்டு வெளியிட்டான்.

இதினிடையில் வியாதியஸ்தனின் மனதைக் குழப்பத்தக்க அநேக தோற்றங்கள் பிரதிதினமும் இரவிலுண்டாயின. அநேக சர்ப்பங்கள் தன் உடலைச் சுற்றிக்கொள்வதுபோலும் அவைகள் ஒவ்வொன்றின் தலையையும் பிடித்துத் துண்டித்துவிடுமாப்போலும் கண்டான். இது போக அநேக சாஸ்திரிகள் தங்கள் வைத்திய பாண்டியத்தியங்களைப் பிரயோகித்துக் குணப்படுத்தப் பிரயாசப்படுவதுபோலும், அவர்களால் கூடாமற்போனபடியினால் துக்கித்துக்கொண்டிருப்பதாகவும் கண்ணுற்றுக் கலக்கமடைந்தான். எல்லா மார்க்கங்களிலுள்ள பண்டிதர்களும் வந்து ஓர் (Electric light) மின்சார விளக்குகளேற்றிய சிங்காரமான அறையில் வந்து உட்கார்ந்து வானத்திலிருந்து விடப்பட்டிருக்கும் ஓர் சிறிய தங்கக்குண்டை தாங்கள் கற்ற வித்தையினால் அடிக்கும்படிப் பிரயாசப்பட்டார்கள். அப்படி யடித்துவிட்டால் அவ்வியாதியஸ்தன் சுகமடைவானென்பது அதின் கருத்து. எத்தனையோ நாட்கள் கஷ்டப்பட்டுப் பிரயாசப்பட்டார்கள். ஆனாலவர்கள் ஒருவராலும் முடியாமற் போய்விட்டது. இப்படியாக வியாதி துவங்கி இருபத்தோர் நாட்களாகியும் விடாததால் வியாதியஸ்தனால் சகிக்கக்கூடவில்லை. இருபத்தோராம்நாள் நிற்குமென்று பார்த்தால் நிற்கவில்லை. அநேகம் குருமார்கள் வந்து ஊக்கமாய் ஜெபித்ததோடு தங்கள் சபைகளிலும் தெரிவித்து விண்ணப்பம்பண்ணினார்கள். அநேகர் கர்த்தரை நோக்கி அதிகமாய் மன்றாடினார்கள். இரண்டாந்தரம் சுரம் திரும்பிக்கொண்டது. இன்னோர் வாரத்தில் சுகமாகுமென்று டாக்டர் சொன்னார். ஆனால் இருபத்தொன்பதாம் நாளிலும் குணமாகவில்லை. எல்லாருக்கும் அதிகத் திகைப்பும் தத்தளிப்புமுண்டாகி மகா கிலேசத்தோடே டாக்டரைப் பார்த்து என்ன ஐயா இவ்வளவு கடினமாயிருக்கிறதே யெனக் கேட்க, அவர்: வியாதிக்காரர் கர்த்தருடைய கரத்தில்தானிருக்கிறார். ஆனாலும் என்னாலியன்றமட்டும் நான் பிரயாசப்படுவேன் என்றார். அப்போது வியாதியஸ்தன் சாடையாய்க் கேட்டு ஒன்றுக்கும் பயமில்லை, தேவன் கைவிடார், நீங்கள் செய்யவேண்டியதைச் செய்யுங்களென்றான். அன்றிரவில் அவன் தேவனை அதிகமாய் மன்றாடினான். அத்தருணத்தில் இன்னோர் காட்சி பின்வருகிறமாறு கண்டு தன்னுடையவர்களுக்குச் சுமார் காலை நாலு மணிக்குச் சொல்லலுற்றான். அதாவது தேவாதி தேவன் ஒரு ஆசனத்தில் வீற்றிருந்தார். அவரது திருமுகம் வானத்தை அளாவியும் அவரது பொற்பாதங்கள் பூமண்டலத்தைத் தொட்டுமிருந்தன. அவருடைய பாதத்தின் ஒரு பக்கத்தில் இவ்வியாதியஸ்தனும் மற்றோர் பக்கத்தில் இன்னொருவனும் உட்கார்ந்திருந்தார்கள். அப்பொழுது மறுபக்கத்திலிருந்த மனுஷன்

எழுந்து நின்று: ஆண்டவரே இவ்வியாதியஸ்தனுக்கு நீர் பாவத்தை மன்னித்தீர், சுகமளித்தீர், ஜீவனருளினீர், ஆனாலவன் எத்தனை பாவங்கள் செய்தானோ, எத்தனை நாட்கள் பாவத்தில் நிலைத்திருந்தானோ அவ்வளவுக்குத் தக்கதாய் வியாதி படுக்கையிலிருந்து உத்தரிப்பது தேவநீதியாகுமென்றான். அது கேட்டு அன்புள்ள கருணாகரக்கடவுளும் ஆமென்றாற்போல் காணப்பட்டது. உடனே வியாதியஸ்தன் பதை பதைத்து எழுந்து நின்று சொல்வான்: ஆண்டவரே, இவன் எப்பொழுதும் என்பேரில் பொய்யான வசனங்களையே எடுத்துரைப்பான், தயவு புரிந்து அடியேன் சொல்வதையும் கேட்டு அப்பால் தீர்மானங் கூறவேண்டுமென்று பிரார்த்தித்தனன். ஆண்டவரே, இம்மானிலத்தில் இயேசுகிறிஸ்தென்ற இரட்சகருதித்ததுண்டு, அவராண்டை வந்து கெஞ்சின பாவிகளநேகம் பேருண்டு, பல நொண்டிகள், சப்பாணிகள் அவராண்டை வந்ததுண்டு, குஷ்டரோகிகள் நேத்திரங்களில்லாக் கபோதிகளவரிடம் இரக்கத்திற்காகக் கெஞ்சினதுண்டு, இப்படிப்பட்ட எல்லாருக்கும் பாவத்தை நீக்கிப் பல பிணியையும் போக்கிச் சமாதானம் கூறினார். ஒருவனையாவது நோக்கி: நான் உன் காலைச் சொஸ்தமாக்க உடனே முடியாது; இரண்டுவாரம் கடுந்தவம் புரிந்து வாவென்று சொன்னதில்லையே. கண்ணில்லா அந்தகனுக்கு நீ செய்த பாதகமும் உன் பெற்றோர் புரிந்த பாவக்கர்மங்களு மதிகமென்று மறுக்கவில்லை. அவரிடம் அண்டிவந்த குஷ்டரோகியைப் பார்த்து நீ நாற்பதுநாள் உபவாசஞ் செய்து பின் வாவென்றுரைக்கவில்லை. வந்தவுடனே பாவங்களை மன்னித்து சுகமளித்து அனுப்பினாரென்று கேள்விப்பட்டு விசுவாசிக்கிறேன். இந்தப் பொய்யன் பகரும் காரியம் சுத்த விகற்பமாயிருக்கிறதென்று சொன்னமாத்திரத்தில் தேவன் கெக்கலிட்டுச் சிரித்து ஆம் அதுதான் சரியென்று விளம்பினார். உடனே வியாதியஸ்தன் விழித்து தன் மனைவிக்குச் சொல்லலுற்றான். சுரம் கண்டு முப்பத்து மூன்றாம் நாள் புதன் பகல் இரண்டுமணிக்குச் சுரம் நீங்கினது. எல்லாருக்கும் அதிகச் சந்தோஷமுண்டாகி கருணை நிறைந்த கடவுளை ஸ்தோத்திரித்துப் புகழ்ந்தார்கள். இன்னமு மநேக நாட்கள் படுக்கையிலேயே யிருக்கும்படி அவ்வளவு பெலயீனமிருந்தது. சில நாட்களாயின பின் ஆண்டவரிடம் வியாதியஸ்தன் பின்வரும் விதம் ஓர் மன்றாட்டுச் செய்தான். ஆண்டவரே, நீர் வெகுவாய்த் தண்டித்தும் சாவுக்கு ஒப்புக்கொடுக்கவில்லை. என்ன ஆச்சரியமும் பிரமிக்கத்தக்க விதமுமான சுகம் கொடுத்தீரே, உமது தூதர்களைக் கொண்டு அடியேனைப் பாதுகாத்தீரே. தூதர்களைப் படங்களில் சித்திரக்காரர்கள் சிறகுகளிருக்கிறதாக வர்ணித்திருப்

பதைப் பார்த்திருக்கிறேன். அற்ப அடியேனைச் சுற்றிலும் தூதர்களிருக்கிறதானால் அவர்கள் செட்டைகளை அடித்துக் காண்பிக்கட்டுமென்றான். அப்படிப்பட்ட தோற்றமொன்றும் காண்பியாமல் அன்றிரவு முதல் சில நாட்களுக்கு அவன் படுக்கையின் இரு பக்கத்திலும் இரண்டுபேர் வெள்ளை அங்கிகளைத் தரித்து இடைகளில் வெள்ளைக் கயிறுகளைக் கட்டிக்கொண்டிருந்தார்கள். வியாதியஸ்தன் விழிக்கும்போது அவர்கள் பேசிக்கொண்டிருப்பதை நிறுத்திவிடுவார்கள். அவன் தூங்கும்போது இருவரும் பேசிக்கொண்டிருப்பார்கள். அவ்விரு தூதாக்களின் சிரசையும் பாதங்களையும் பார்க்க முடியாதிருந்தது. இக்காலங்களில் அதிசயமான பெலனும் சுகமும் திட்டமாக வுண்டாகித் தேர்ச்சியுண்டாயிற்று. கடைசியாக ஒருநாள் ஒரு மனு பண்ணினான்: ஆண்டவரே என் நான் எழுந்திருக்கக் கூடாதபடி என் கால்களையும் கரங்களையும் படுக்கையோடே ஆணியடித்துக் கட்டிவைத்திருக்கிறீர். எப்பொழுது என்னை விடுதலையாக்குவீரென்றான். அன்றிரவில் ஒரு தூதன் வந்து நின்றான். வியாதியஸ்தன் தொண்டையிலே கசாப்புக்காரன் கறி தூக்கும் கொண்டியொன்று மாட்டி வானத்திலிருந்து ஓர் சிறு சங்கிலியிலே தொங்குவதாகக் கண்டான். அப்பால் அத்தூதன் அக்கொண்டியைத் தொண்டையிலிருந்து எடுத்து இன்று முதல் உனக்கு பூரண சுகமும் பெலனுமுண்டாயிற்று, இனிமேல் மருந்து வேண்டுவதில்லையென்று மறைந்தான். அன்று முதல் பரிபூரண சுகமுண்டாகி பெலனடைந்தான். ஊரெல்லாம், கிறிஸ்தவர்கள் கூட்டங்களிலெல்லாம் இவன் மரித்துப்போனானென்ற பிரஸ்தாபமுண்டாகி சிலர் துக்கம் கேட்கும்படியாக வீடு வந்தனர். இப்போது இவன் சுகதேகியாய் மூடிக்கொண்டு படுத்து நித்திரை செய்திருக்கும் தருணத்தில், அவர்கள் நின்று அதிக அனுதாபத்தோடு, 'ஐயா பரலோகம் சேர்ந்தார்களென்று கேள்விப்பட்டு விசனப்படுகிறோம். போன வாரம் வரமுடியவில்லை' யென்று சொல்லித்திரும்புகையில் ஓர் மனுஷன் மூடிப் படுத்திருப்பதைக் கண்டு இது யாரென்று வினவ, 'இது அவர்கள்தான், கர்த்தர் நல்ல சுகம் கொடுத்தார்' என்று அவர் மனைவி விடைபகர்ந்தனள். உடனே வந்த சிநேகிதர் திடுக்கிட்டு தயவுசெய்து மன்னிக்க வேண்டுமென்றார்கள். இன்னோர் உத்தம சிநேகிதன் இவன் மரித்துப்போனானென்று கேள்விப்பட்டு ஒரு அன்பான காகிதம் துக்கம் விசாரித்து எழுதினார். அப்புறம் உண்மை யறிந்து மன்னிப்பு கடிதமொன்றெழுதி தம்மன்பை வேறுவிதமாய் வெளியிட்டார். கர்த்தர் மகத்துவங்களைச் செய்கிறவர். அவரை நம்புகிற பாவியை ஒருபோதும் கைவிடார். இப்போது அந்த மனுஷன்

தேவ பணிவிடைக்கு தன்னைச் சேவகம் எழுதிக்கொண்டவனாய் இரட்சணிய செய்தியை எல்லாருக்கும் கூறி அறிவிக்கின்றனன்.

'பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலிய தீமையை வென்றோம், நலியும் ஆசையைக் கொன்றோம்,
வஞ்சகர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்றதெல்லாம் விண்டோம், கர்த்தாவின் மீட்பைக் கண்டோம்;
காய்ந்த மனதொடு பாய்ந்து விழுகணம்
சாய்ந்து கெடவும் ஆராய்ந்து நெறியுடன்'—இம்மட்டும்.

Heaven.

## LESSONS FOR FAMILY WORSHIP

# வேத வாசிப்பு ஒழுங்கு

### 1919-ஆம் ஏப்ரல் மீ

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செ. | லூக். | 19 | 1—10 | 11 | வெ. | லூக். | 22 | 1—13 | 21 | தி | லூக். | 24. | 13—24 |
| 2 | பு. | „ | 19 | 11—27 | 12 | ச. | „ | 22 | 14—25 | 22 | செ. | „ | 24. | 25—35 |
| 3 | வி. | „ | 19. | 28—38 | 13 | ஞா | „ | 22. | 26—38 | 23 | பு. | „ | 24 | 36—53 |
| 4 | வெ. | „ | 19. | 39—48 | 14 | தி | „ | 2 . | 39—53 | 24 | வி | 1 கொரி | 10. | 1—14 |
| 5 | ச. | „ | 20. | 1—18 | 15 | செ. | „ | 22. | 54—71 | 25 | வெ | „ | 11. | 1—14 |
| 6 | ஞா. | „ | 20. | 19—36 | 16 | பு | „ | 23. | 1—12 | 26 | ச. | „ | 11. | 15—25 |
| 7 | தி | „ | 20. | 37—47 | 17 | வி. | „ | 23. | 13—26 | 27 | ஞா. | „ | 12 | 16—26 |
| 8 | செ. | „ | 21. | 1—13 | 18 | வெ | „ | 23 | 27—43 | 28 | தி. | „ | 12. | 27—40 |
| 9 | பு. | „ | 21. | 14—24 | 19 | ச. | „ | 23 | 44—56 | 29 | செ. | „ | 13. | 1—14 |
| 10 | வி | „ | 21. | 25—38 | 20 | ஞா | „ | 24 | 1—12 | 30 | பு. | „ | 14. | 8—17 |

C. L. S. PRESS, MADRAS—1919